சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், நூற்பாலைகளின் கோரிக்கைகள் ஏற்பு

# மின் பளுவை குறைக்கும் வண்ணம் நிலை கட்டணம் குறைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.24

தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், நூற்பாலைகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, மின் கட்டண முறைகளை மாற்றி அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், 2022-23 முதல் 2026-27 நிதியாண்டு வரையிலான காலத்திற்கான பல ஆண்டு கட்டண (Multi Year Tariff) மின்கட்டண மனுவை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNERC) முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் (TANGEDCO), சமர்ப்பித்தது.

இதனால் ஏற்பட்ட மின்கட்டண மாற்றம் குறித்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை மாற்றி அமைத்திட முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இதன்படி, TANGEDCOவிற்கு ஆண்டிற்கு ரூ.2,000 கோடி வருவாய் குறைந்தாலும், தொழில்முனைவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு 50 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.100 லிருந்து ரூ.75 எனவும் 50 கிலோவாட்டுக்கு மேல் 100 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை, ரூ.325 லிருந்து ரூ.150 எனவும், 100 கிலோவாட் முதல் 112 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த மாதம் நிலையான கட்டணத்தை ஒன்றுக்கு ரூ.500லிருந்து ரூ.150 எனவும், 112 கிலோவாட்டுக்கு மேல் உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை, மாதம் ஒன்றுக்கு ரூ.600 லிருந்து ரூ.550 எனவும், TNERCயின் ஒப்புதல் பெற்று மாற்றியமைக்கப்பட்டது.

இதன் பின்னர், தொழில் மேம்பாட்டிற்கான மேலும் நடவடிக்கையாக, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவு நுகர்வோர்களின் கோரிக்கைகளை ஏற்று, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான (LT IIIB) உச்சநேர நுகர்விற்கான மின்கட்டணத்தை 25 சதவீதத்திலிருந்து 15 குறைத்து ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த குறைக்கப்பட்ட கட்டணங்களுக்கான கூடுதல் மானியமாக ஆண்டிற்கு ரூ.145 கோடி தமிழக அரசு வழங்குகிறது. இதனால் சுமார் 3.37 லட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பல ஆண்டு மின்கட்டண ஆணையின் படி, 2023 ஜூலை மாதத்தைப் பொறுத்த வரையில், 2022 ஏப்ரல் மற்றும் 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின் படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள் ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும் போது பொது மக்களும் தொழில்துறையினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இதன்படி கட்டண உயர்வு விகிதம் மறுஆய்வு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணிற்கு பதிலாக சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் விலை குறியீட்டு எண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால் கட்டண உயர்வின் அளவு 4.7 ரூபாயிலிருந்து 2.18 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழில்களின் நலம் காக்க தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் நூற்பாலைகளின் கோரிக்கைகள் தொடர்பாக நிதி, மனிதவள மேம்பாடு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் 21.07.2023 அன்று தலைமைச்செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜவுளித் தொழிலின் நிலைத் தன்மையை தமிழக முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்றனர்.

தமிழ்நாட்டில் தொழில்துறையிலும் ஜவுளித்துறையிலும் தற்போது நிலவிவரும் இடர்பாடுகளை ஆராய்ந்து, ஒன்றிய அரசின் பார்வைக்கு எடுத்துச்செல்ல வேண்டிய கோரிக்கைகளை கடிதம் மூலம் தெரிவித்தும், மின்கட்டணம் தொடர்பான தொழிற்சாலைகளின் கோரிக்கைகளை பரிசீலித்தும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு முதல்வர் அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. பருவகாலத் தேவைக்கு ஏற்ப மாறும் தன்மையுள்ள மின்பளுவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு நிலை கட்டணத்தை குறைத்து கொள்ளும் வகையில், அனுமதிக்கப்பட்ட மின்பளுவினை குறைத்துக் கொள்ளவும், மேலும் தேவைப்படும்போது அனுமதிக்கப்பட்ட மின்பளுவிற்குள் உயர்த்திக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக எவ்வித கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டியது இல்லை. இச்சலுகையை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறை பயன்படுத்திக் கொள்ளலாம்.

2. சூரிய ஒளி சக்தி மேற்கூரை மின் உற்பத்தி செய்ய மின் இணைப்புகளுக்கு 15% மூலதன மானியம் வழங்கப்படும்.

3. 12 கிலோ வாட்க்கு குறைவாக உள்ள சிறு, குறு தொழிற்சாலைகளுக்கு வீதப்பட்டி IIIB லிருந்து IIIA1 வீதப்பட்டிக்கு மாற்றுவது குறித்து தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் கருத்துரு பெற்ற பின் பரிசீலிக்கப்படும்.

நாமக்கல் - சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம்பட்டிமேடு)

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை - அறிவகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்!

**நாமக்கல், செப். 24-**

**தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை, நாமக்கல் மாவட்டம் - கொண்டம்பட்டி மேட்டில் நிறுவப்பட்டுள்ளது.**

**இத்திருவுருவச் சிலையினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை காணொலி மூலம் திறந்து வைத்து - விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.**

இவ்விழா பற்றிய விபரம் வருமாறு:-

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை நடத்தும் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை மற்றும் அறிவகம் திறப்பு விழா நாமக்கல் சேந்தமங்கலம் சாலையில் உள்ள சிவியாம்பாளையம் கொண்டம்பட்டிமேடு சிலம்பொலியார் நகரில் நடைபெற்றது.

விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், முனைவர் சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் ஆகியோர் அருளுரை வழங்கினர். விழா வில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செய லாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வரவேற்புரை ஆற்றினார். பி.ஜி.பி. குழுமத் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி தலைமை தாங்கினார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம் சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை மற்றும் அறிவகம் ஆகியவற்றை காணொலி வாயிலாக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் இளங்கோ விருது மற்றும் ஒரு லட்சம் பொற்கிழியை சிலம்புச்செம்மல் புலவர் தமிழமுதன் பெற்றார். தமிழறிஞர்கள் முனைவர் மா.ராஜேந்திரன், முனைவர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை செ.கொங்குவேள் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிகளை கவிஞர் தமிழன் ராகுல்காந்தி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

அறிவகத்திற்கு சிவியாம்பாளையம் பூங்கோதை செல்லதுரை நிலம் வழங்கி உள்ளார். சிலை அமைப்பு குழு தலைவர் சு.குமாரசாமி, செ.ராஜேந்திரன், வை.சித்தார்த்தன், செயற்குழு உறுப்பினர்கள் சி.கா.செல்லப்பன், இரா.வெங்கடாசலம் ப.சம்பத்குமார், சி.கா.பழனிசாமி, மு.சேரலாதன், பூங்கோதை செல்லதுரை, இரா.அன்பழகன், ஆ. செல்வராஜ், சு.பெரியசாமி மற்றும் சிவியாம்பாளையம் ஊர் பொதுமக்கள், சிலம்பொலியாரின் சீர்மிகு மாணவர்கள், தமிழன்பர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் ஆகியோர்

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் தேவராஜன்,

சிலம்பொலி செல்லப்பன் இல்லத்தினர் நா.புட்பராசு, முனைவர் மணிமேகலை, குமாரவடிவு செ.தொல்காப்பியன், கு.இராமலிங்கம், மருத்துவர் கௌதமி, செ.கொங்குவேள், மருத்துவர் ஈஸ்வரி மருத்துவர் செ.ராமகிருஷ்ணன், நகைமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



எழும்பூர் தொகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பல்வேறு திட்டப் பணிகளை இளைஞர் நலன் மற்றும விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன், தயாநிதி மாறன், எம்.பி., இ.பரந்தாமன், எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.

எழும்பூர் தொகுதியில் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

# திட்டப்பணிகள் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - தா.மோ.அன்பரசன் - தயாநிதி மாறன் எம்.பி. - இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. - மேயர் பிரியாராஜன் - துணை மேயர் மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, செப்.24-

இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழும்பூர் தொகுதியில் நடைபெற்ற நான்கு நிகழ்வுகளில் பங்கேற்று, பல்வேறு திட்டப்பணிகளைப் பகுதி மக்களின் பெரும் வரவேற்புக்கிடையே தொடங்கி வைத்தார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, சிறு, குறு, நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார் ஆகியோர் இத்தொடக்க நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அவர்களின் 2021-2022-ஆம் ஆண்டுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம் 6, வார்டு எண்.77-இல் கேசவ பிள்ளை பூங்கா நகர்ப்புற மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவருடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம்; மற்றும் அதே குடியிருப்பில் சிங்கார சென்னை-2 திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் சார்பில் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன கால்பந்தாட்ட மைதானம் ஆகிய இரண்டு திட்டப் பணிகளை கே.பி.பார்க், புளியந்தோப்பில் நடந்த நிகழ்வுகளில் பங்கேற்று, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார்.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அவர்களின் 2021-2022-ஆம் ஆண்டுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 16 சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 78 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 39 அறிதிறன் வகுப்புகளை (Smart Classes) சேத்துப்பட்டு, மேயர் சத்தியமூர்த்தி சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் நடந்த நிகழ்வில் மாணவர்களின் பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார்.

மேலும், எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, சேத்துப்பட்டு எம்.எஸ். நகரில் நடந்த நிகழ்வில், 41.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படவுள்ள 240 வீடுகளைக் கொண்ட ஆறு தள எம்.எஸ். நகர் அடுக்குமாடிக் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான கே.எஸ்.இரவிச்சந்திரன், எழும்பூர் வடக்குப் பகுதி செயலாளரும் மாமன்ற நியமனக் குழு உறுப்பினருமான சொ.வேலு, தெற்குப் பகுதி செயலாளர் வீ.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள் எல்.சுந்தர்ராஜன், பரிதி இளம் சுருதி; பொதுக்குழு உறுப்பினர் அ.நிர்மலாதேவி; வட்டச் செயலாளர்கள் டி.தயாளன், வீ.விஜயகுமார், ஆர்.பாபு, இ.மொய்தீன், வான்மதி கதிரவன்; மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சங்கர் நானா, வினோத்குமார்;

முன்னாள் பகுதி செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் வட்டச் செயலாளர்கள் ஆர்.புருஷோத்தமன் வெ.மருதன்; மாவட்டப் பிரதிநிதிகள் கமலகண்ணன், மா.காந்தி, எம்.ரமேஷ், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், பகுதி பிரதிநிதிகள் இளஞ்செழியன், அனல் தமிழா, இரா.பாலமுருகன்;

எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் செ.பாலாஜி, பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் எம்.வெற்றிவேலன், ஆதி திராவிட நலக்குழு அமைப்பாளர் ரா.சந்தியாகு, பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சி.முத்துலட்சுமி;

கே.சீனிவாசன், வீ.கே. ரவி, எஸ்.வெங்கடேசன், சி.டி.சுரேஷ், மு.குறளரசன், ஆரோக்கியம், ஜெ. இந்திரா காந்தி, எஸ்.சரசுவதி, கே. பாரூக், எம்.எஸ்.அபேன், வா. சிவகுமார், எஸ்.கருணாகரன், பி.ஆர்.சந்தோஷ், பொ.சண்முகம், ஜி.மணிகண்டன், பா.ஆனந்த், வீ. பாபு, ஆர்.ராஜ்மோகன்; பு.ஜிம்போ, சி.அருண், எம். கிருஷ்ணமூர்த்தி;

108அ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108 வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சந்தோஷ்குமார், 58 அ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுகுமாரன், வழக்கறிஞர் அணி முன்னாள் மாவட்டத் துணை அமைப்பாளர் விஜயபோஸ், அ.குருமூர்த்தி, கி.புஷ்பராஜ், கவிதா, தர்மதுரை, அன்புமணி பாலாஜி, ம.கார்த்திகேயன், அசினா பேகம் மற்றும் கழக முன்னோடி களும் பகுதி பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

காளையார் கோவிலில் - பா.ஜ.க.தேசியச் செயலாளர்

# எச்.ராஜா உட்பட 3 பேர் மீது அவதூறு வழக்கு!

சிவகங்கை, செப். 24-

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக காரைக்குடி மற்றும் காளையார் கோயில் விநாயகர் சிலையை ஆற்றில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காளையார்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் பா.ஜ.க. தேசிய செயலாளர் எச். ராஜா. முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின்

மீதும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீதும் தரக்குறைவாகவும் அவமரியாதையாகவும் மற்றும் மத கலவரத்தை ஏற்படுத்திடும் வகையில் அவதூறாக பேசியதாக காளையார் கோயில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்வே.ஆரோக்கிய சாமி போலீஸில் கொடுத்த புகாரின் பேரில் காளையார் கோவில் போலிசார் ஹெச். ராஜா மீது இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் 153A, 294 , 295 ஏ ,505/2 ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள். இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

இதேபோல் காரைக்குடியில் நடைபெற்ற ஊர்வலத்தில் மாவட்ட பா.ஜக. செயலாளர் நாகராஜன் இந்து முன்னணி மாவட்ட தலைவர் அக்னி பாலா ஆகியோர் மதக் கலவரத்தில் தூண்டும் வகையில் பேசியதாகவும் முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் ஆகியோரை தரக்குறைவாக பேசியதாக காரைக்குடி நகரச் செயலாளர் என். குணசேகரன் காரைக்குடி போலீஸில் கொடுத்த புகாரின் பேரில் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

# நியூசிலாந்தில் நிலநடுக்கம்!

வெல்லிங்டன்,செப். 24

நியூசிலாந்து நாட்டின் தெற்கு தீவு பகுதியில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் சேதங்கள் எதுவும் இல்லை எனக் கூறப்பட்டு உள்ளது. நியூசிலாந்து நாட்டின் தெற்கு தீவு பகுதியில் அமைந்துள்ள ஜெரால்டின் நகருக்கு அருகே நேற்று காலை 9.15 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 11 கிமீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் அதிர்வை சுமார் 14,000 மக்கள் உணர்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கங்களில் இதுவே மிக வலிமையானது என நியூசிலாந்து நில அதிர்வு கண்காணிப்பு மையமான ஜியோநெட் தெரிவித்துள்ளது.

